# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)
**Under Section 173 BNSS** C

8082868

1. District : அரியலூர் மாவட்டம் | PS: V&AC காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 4/24 மு.த.அ. எண் | Date: 28.11.24 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended 2018) — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)
   (ii) Act சட்டம்: இ.த.ச — Sections பிரிவுகள்: 468, 471,
   (iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (amended 2018) — Sections பிரிவுகள்: 12 r/w 13(2) r/w 13(1)(a)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : இ.த.ச 468, 471 r/w 34, 109

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2016 | Date to : நாள் வரை 2022
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.11.24 | Time : நேரம் 11.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.11.24 | Time : நேரம் 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — உ.த.க.பிரிவு இரகசிய விசாரணை தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 km வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.S. ஜெயச்சந்திரா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. சிங்காரவடிவேல்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் DSP | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ① ச. அம்பிகாலிங்கம் 54/24 S/o ஜோதிலிங்கம், முன்னாள் வரிசீர் அலுவலர் / கண்காணிப்பாளர் (Housing) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் 8 நபர்கள் அரியலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர், பொறுப்பு அரியலூர் K.S.ஹேமசித்ரா ஆகிய நான் இன்று 28.11.2024-ம் தேதி 11.00 மணியளவில் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக குறிப்பாணை எண். PE 108/2023/RDP/ARL, Dt:- 20.11.2024-ன் உத்தரவுப்படி பதிவு செய்த வழக்கின் விபரம் பின்வருமாறு.

[Seprate Sheet Enclosed]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் B. சந்திரா காவல் ஆய்வாளர் V&AC நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு அரியலூர் ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28/11/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 28/11/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 28.11.24 at 12.00Hrs

Name: பெயர் K.S. ஹேமசித்ரா
Rank: நிலை DSP., V&AC, No. எண் .........
பெரம்பலூர் (பொறுப்பு) அரியலூர்

**அரியலூர் ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 04/2024**

**முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

**எதிரிகள்**

1. திரு.J.அமிர்தலிங்கம், 54/2024,
   த/பெ. ஜெகதீசன்,
   வட்டார வளர்ச்சி அலுவலர்/
   கண்காணிப்பாளர்(Housing),
   மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை,
   அரியலூர் மாவட்டம்.
   (முன்னாள் - வ.வ.அலுவலர்(கி.ஊ.),
   ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம்)

2. திரு.S.அருளப்பன், 57/2024,
   த/பெ. சுந்தரமூர்த்தி,
   வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.),
   அரியலூர் ஊராட்சி ஒன்றியம்,
   அரியலூர் மாவட்டம்.
   (முன்னாள் - வ.வ.அலுவலர்(கி.ஊ.),
   ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம்)

3. திரு.R.நாராயணன், 58/2024,
   த/பெ. ராமசாமி,
   வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
   அரியலூர் ஊராட்சி ஒன்றியம்,
   அரியலூர் மாவட்டம்.
   (முன்னாள் - வ.வ.அலுவலர்(கி.ஊ.),
   ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம்)

4. திரு. ஜாகீர் உசேன், 58/2024,
   த/பெ. சேக் அகமத்,
   வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),
   செந்துரை ஊராட்சி ஒன்றியம்,
   அரியலூர் மாவட்டம்
   (முன்னாள் - வ.வ.அலுவலர்(கி.ஊ.),
   ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம்)

5. திரு.ச.அந்தோணிசாமி, 55/2024,
   த/பெ. சவரிமுத்து,
   பணி மேற்பார்வையாளர்,
   திருமானூர் ஊராட்சி ஒன்றிய
   அலுவலகம், அரியலூர் மாவட்டம்.
   (முன்னாள் - பணி மேற்பார்வையாளர்
   ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம்)

**எதிரி-1** திரு.J.அமிர்தலிங்கம் என்பவர் 12.06.2014 முதல் 19.08.2015 வரை, 03.04.2017 முதல் 04.07.2017 வரை மற்றும் 13.05.2020 முதல் 25.02.2021 வரை ஆகிய காலங்களில் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-2** திரு.S.அருளப்பன் என்பவர் 05.07.2017 முதல் 17.07.2018 வரை மற்றும் 04.08.2021 முதல் 31.05.2022 வரை ஆகிய காலங்களில் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-3** திரு.R.நாராயணன் என்பவர் 31.05.2022 முதல் 31.07.2023 வரை ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-4** திரு.ஜாகீர் உசேன் என்பவர் 26.02.2021 முதல் 31.07.2021 வரை ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-5** திரு.ச.அந்தோணிசாமி என்பவர் கடந்த 21.11.2019 முதல் 19.06.2022 வரை ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய பணி மேற்பார்வையாளர்(Overseer)-ஆக பணிபுரிந்தபோது, வல்லம் ஊராட்சி பணிகளை மேற்பார்வை செய்து வந்துள்ளார்.

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (திருத்தம் 2018), பிரிவு 2(c)-இன் படி பொது ஊழியர் ஆவார்.

எதிரிகள் 6 முதல் 9 வரையிலானவர்கள் தனி நபர்கள்ஆவார்.

| | |
|---|---|
| 6. திருமதி.கவிதா, 44/2024,<br>க/பெ. பாஸ்கர்,<br>கு.வல்லம், ஆண்டிமடம் ஊராட்சி<br>ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.<br>(Private Individual)<br><br>7. திரு.ஜெயபால், 62/2024,<br>த/பெ. கலியமூர்த்தி,<br>கு.வல்லம், ஆண்டிமடம் ஊராட்சி<br>ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.<br>(Private Individual)<br><br>8. திருமதி.சாவித்திரி,<br>க/பெ. ரத்தினம்,<br>கு.வல்லம், ஆண்டிமடம் ஊராட்சி<br>ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.<br>(Private Individual)<br><br>9. திருமதி.அஞ்சலை, 42/2024,<br>க/பெ. ராமதுரை,<br>கு.வல்லம், ஆண்டிமடம் ஊராட்சி<br>ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.<br>(Private Individual) | சொந்த வீடு இல்லாமல் கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு கான்கிரீட் கூரையிலான வீடு வழங்கும் திட்டம் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு வரை அரசால் இந்திரா குடியிருப்பு திட்டம் (IAY) என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து 2016-17 முதல் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊராகம்) (PMAY-G) என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>IAY திட்டத்திற்கான பயனாளிகள் தொடர்பாக பயனாளிகள் பட்டியல் தயார் செய்து, கிராம சபை ஒப்புதல் பெறப்பட்டு, வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலரால் அது சரிபார்க்கப்பட்டு, தகுதியான நபர்களுக்கு வீடுகட்ட அனுமதி ஆணை வழங்கப்படும். பயனாளிகள் வீடுகட்டும் பணியினை பார்வையிடுவது, மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பது போன்றவை அந்தந்த பணி மேற்பார்வையாளர்களின் பணியாகும். பணிமேற்பார்வையாளர்கள் அறிக்கை சமர்ப்பித்த பின்னர் வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலரால் அவை சரிபார்க்கப்பட்டு, தல ஆய்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கான தவணை தொகை வழங்க செயல்முறை ஆணை பிறப்பிக்கப்படும். |

அதன்படி பயனாளிகளுக்கான தவணைத்தொகை, ஊராட்சியின் திட்ட நிதி கணக்கில் வரவு வைக்கப்படும். சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் பயனாளிகளுக்கான தொகையினை காசோலையாக வழங்குவார். பயனாளிகள் அதனை வங்கியில் கொடுத்து காசாக்கம் செய்து, பயனடைவார்கள். இதுவே இந்த திட்டத்தின் நடைமுறையாகும்.

2016-2017 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் PMAY(G) திட்டத்திற்கு, Socio Economic and Caste Census-2011 (SECC data)-இல் இருந்து ஊராட்சி வாரியாக இத்திட்டத்திற்கு தேர்வு செய்ய தகுதியான நபர்களின் பெயர் விபரங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் பெற்று, பட்டியலில் உள்ள நபர்கள் தற்போது இத்திட்ட பயனாளியாக தேர்வு செய்ய தகுதியுடையவரா என்பதனை தனக்குகீழ் பணிபுரியும் அலுவலர்கள் மூலமாக அறிவதுடன், தானும் அதனை உறுதி செய்த பின்னர் தகுதியான பயனாளிகளை PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்ய வேண்டி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலருக்கு பரிந்துரை செய்ய வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யும் போது, அரசு வேலையில் உள்ளவர்கள், கான்கிரீட் வீடு உள்ளவர்கள், ஏற்கனவே வேறு ஏதேனும் குடியிருப்பு திட்டங்களில் பயன் அடைந்தவர்கள் ஆகியோர்களை இனங்கண்டு, பட்டியலில் இருந்து தகுதி நீக்கம் செய்து தகுதியான நபர்களை திட்டபயனாளியாக தேர்வு செய்ய வேண்டியது வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களது பணியாகும்.

அவ்வாறு தகுதியான பயனாளிகளின் பட்டியல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்ட பின்னர், வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலரால் பயனாளர்களுக்கு வீடுகட்ட அனுமதி ஆணை (Work Order) வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து பயனாளிகள் வீடுகட்ட தேர்வு செய்துள்ள இடத்தில் அளவீடு செய்து கொடுப்பது, பணிகளின் ஒவ்வொரு நிலையிலும் (Basement,Plinth, Roof, Completed) மதிப்பீடு செய்து வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலருக்கு Bill சமர்ப்பிப்பது, Geo-Tag புகைப்படம் எடுப்பது போன்றவை அந்தந்த ஊராட்சி ஒன்றிய பணி மேற்பார்வையாளர்களின் பணியாகும். அதனைத் தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்கள் மதிப்பீடு பட்டியலையும், Geo Tag புகைப்படங்களையும் ஒப்பிட்டு சரிபார்த்து, தல ஆய்வு செய்து உறுதிசெய்த பின்னர் Online-ல் உள்ள தனது Login-ல் பயனாளிகளுக்கான தவணைத் தொகைகளை விடுவிக்க அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர் பயனாளிகளுக்கான தவணைத்தொகை அவர்களது வங்கி கணக்குகளில் ECS மூலமாக வரவுவைக்கப்படும். இதில் பயனாளி அல்லது பயனாளியின் குடும்பத்தார் அல்லாத நபர்களின் வங்கிகணக்கில் பணம் வரவு வைக்கப்பட கூடாது.

இத்திட்டத்தில் ஒரு வீட்டிற்கு ரூ.1,70,000/- (ரூ.1,20,000/-ரொக்கப் பணம் மற்றும் ரூ.50,000/-மதிப்புடைய கட்டுமான பொருட்கள்) வழங்கப்படும். மொத்தம் 4 தவணைகளாக ரூ.1,20,000/- பணம் பயனாளரின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படும். மேலும், வீடுகட்டும் பணி நடைபெற்றுவரும் போது ரூ.50,000/- மதிப்புடைய சிமெண்ட் மூட்டைகள் மற்றும் இரும்பு கம்பிகள் பயனாளருக்கு வழங்கப்படும்.

**எதிரி-1** திரு.J.அமிர்தலிங்கம் என்பவர் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்தபோது, 2020-21 ஆம் ஆண்டில் **எதிரி-6** திருமதி.கவிதா க/பெ. பாஸ்கர் மற்றும் **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி ஆகியோர்களை PMAY(G) திட்ட பயனாளிகளாக தேர்வு செய்து அனுமதி ஆணை (Work Order) வழங்கியுள்ளார். மேலும், ஏற்கனவே இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் (IAY) பயனடைந்த பயனாளிகளான **எதிரி-9** திருமதி.அஞ்சலை க/பெ. ராமதுரை மற்றும் மதியழகன் (13.05.2021 அன்று இறந்துவிட்டார்) த/பெ. நடேசன் ஆகியோர்களை PMAY(G) திட்டப் பயனாளிகளாக தேர்வு செய்து, அவர்களுக்கு வீடு கட்டுவதற்கான அனுமதி ஆணையினை (Work Order) வழங்கி, **எதிரி-5** திரு.அந்தோணிசாமி, பணி மேற்பார்வையாளர் என்பவரை கூட்டு சேர்த்துக்கொண்டு, ஏற்கனவே IAY திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளை PMAY(G) திட்டத்தில் கட்டியதாக பொய்யாக ஆவணங்களை தயார் செய்து, அவர்களுக்கான திட்டநிதி ரூ.3,31,504/- (ரொக்கம் ரூ.2,40,000/- + கட்டுமான பொருட்கள் ரூ.91,504/-) வழங்கப்பட்டதாக காண்பித்து 6, 7 மற்றும் 9-ம் எதிரிகளின் உதவியுடன் ரூ.3,31,504/- கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

**எதிரி-2** திரு.அருளப்பன் என்பவர் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்தபோது, 2021-22 ஆம் ஆண்டில் **எதிரி-8** திருமதி.சாவித்திரிக/பெ. ரத்தினம் என்பவரை PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்து அனுமதி ஆணை (Work Order) வழங்கியுள்ளார். மேலும், **எதிரி-5** திரு.அந்தோணிசாமி, பணி மேற்பார்வையாளர் என்பவருடன் கூட்டுசேர்ந்து, PMAY திட்ட பயனாளிகள் (எதிரி - 6, 7) வீடு கட்டாமலேயே கட்டியதாக பொய்யாக ஆவணங்களை

தயார் செய்து **எதிரி-6** திருமதி.கவிதா க/பெ. பாஸ்கர் என்பவருக்கு ரூ.1,35,565/-(ரொக்கம் ரூ.1,20,000/- + கட்டுமான பொருட்கள் ரூ.15,565/-) மற்றும் **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி என்பவருக்கு ரூ.41,594/- (ரொக்கம் ரூ.26,029/- + கட்டுமான பொருட்கள் ரூ.15,565/-) வழங்கியதாக காண்பித்து 6 மற்றும் 7ம் எதிரிகள் உதவியுடன் மொத்தம் ரூ.1,77,159/- கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

**எதிரி-3** திரு.நாராயணன் என்பவர் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்தபோது, **எதிரி-5** திரு.அந்தோணிசாமி, பணி மேற்பார்வையாளர் என்பவருடன் கூட்டுசேர்ந்து, PMAY(G) திட்ட பயனாளிகள் (எதிரி - 7, 8) வீடு கட்டாமலேயே கட்டியதாக பொய்யாக ஆவணங்களை தயார் செய்து **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி என்பவருக்கு ரூ.93,971/- பணம் மற்றும் **எதிரி-8** திருமதி.சாவித்திரி க/பெ. ரத்தினம் என்பவருக்கு ரூ.1,53,800/- (ரொக்கம் ரூ.1,20,000/- + கட்டுமான பொருட்கள் ரூ.33,800/-) வழங்கியதாக கணக்கு காண்பித்து 7 மற்றும் 8-ம் எதிரிகள் உதவியுடன் மொத்தம் ரூ.2,47,771/- கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

**எதிரி-4** திரு.ஜாகீர் உசேன் என்பவர் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலராக பணிபுரிந்தபோது, **எதிரி-5** திரு.அந்தோணிசாமி, பணி மேற்பார்வையாளர் என்பவருடன் கூட்டுசேர்ந்து, PMAY(G) திட்ட பயனாளிகள் (எதிரி - 6 , 7) வீடு கட்டாமலேயே கட்டியதாக பொய்யாக ஆவணங்களை தயார் செய்து **எதிரி-6** திருமதி.கவிதா க/பெ. பாஸ்கர் மற்றும் **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி ஆகியோர்களுக்கு தலா ரூ.30,187/- மதிப்புள்ள கட்டுமான பொருட்களை வழங்கியதன் மூலம் மொத்தம் ரூ.60,374/- 6 மற்றும் 7ம் எதிரிகள் உதவியுடன் கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

**எதிரி-2** திரு.அருளப்பன், **எதிரி-3** திரு.நாராயணன் மற்றும் **எதிரி-4** திரு.ஜாகீர் உசேன் ஆகியோர்கள் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாக பணிபுரிந்த காலத்தில், **எதிரி-6** திருமதி.கவிதா க/பெ. பாஸ்கர், **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி மற்றும் **எதிரி-8** திருமதி.சாவித்திரி க/பெ. ரத்தினம் ஆகியோர்கள் PMAY(G) திட்டத்தின் கீழ் வீடு கட்டாமல் இருந்து வந்த நிலையில், தங்களுக்கு கீழ் பணிபுரிந்த பணி மேற்பார்வையாளரான **எதிரி-5** திரு.ச.அந்தோணிசாமி என்பவருடன் கூட்டு சேர்ந்து, மேற்படி 6 முதல் 8 வரையிலான எதிரிகள் வீடு கட்டியது போன்று பொய்யான ஆவணங்களை தயார்செய்து, Geo Tag புகைப்படம் எடுத்து, அவர்களுக்கு PMAY(G) திட்டத்தின் கீழ் அவர்களுக்கான திட்ட நிதி ரூ.4,85,304/- (ரொக்கம் ரூ.3,60,000/- + கட்டுமானபொருட்கள் ரூ.1,25,304/-) வழங்கியதாக காண்பித்து ரூ.4,85,304/- தொகையை 6, 7 மற்றும் 8ம் எதரிகள் உதவியுடன் கையாடல் செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

**எதிரி-6** திருமதி.கவிதா க/பெ. பாஸ்கர், **எதிரி-7** திரு.ஜெயபால் த/பெ. கலியமூர்த்தி ஆகியோர்கள் 2020-21 ஆம் ஆண்டிலும், **எதிரி-8** திருமதி.சாவித்திரி க/பெ. ரத்தினம் என்பவர் 2021-22 ஆம் ஆண்டிலும் PMAY(G) திட்ட பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டு, வீடு கட்டுவதற்கான ஆணை பெற்றிருந்த நிலையில், அரசு அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து, தாங்கள் மேற்படி திட்டத்தின் கீழ் வீடு கட்டவில்லை என்பதனை மறைத்து, மேற்படி திட்ட நிதியினை முறைகேடாக பெற்று அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேலும், **எதிரி-9** அஞ்சலை க/பெ. ராமதுரை என்பவர் தான் ஏற்கனவே 2009-2010 ஆம் ஆண்டில் இந்திரா குடியிருப்பு திட்டத்தின் (IAY) கீழ் பயனடைந்துள்ள விபரத்தினை மறைத்து, அரசு அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து, முறைகேடாக 2020-2021 ஆம் ஆண்டில் PMAY(G) திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினை (Work Order) பெற்று, மேற்படி திட்ட நிதியினை பெற்று அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு **எதிரி-1** திரு.J.அமிர்தலிங்கம், **எதிரி-2** திரு.அருளப்பன், **எதிரி-3** திரு.நாராயணன் மற்றும் **எதிரி-4** திரு.ஜாகீர் உசேன் ஆகியோர்கள் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாக பணிபுரிந்த காலத்தில், **எதிரி-6** திருமதி.கவிதா, **எதிரி-7** திரு.ஜெயபால், **எதிரி-8** திருமதி.சாவித்திரி மற்றும் **எதிரி-9** திருமதி.அஞ்சலை ஆகிய பயனாளிகள் PMAY(G) திட்டத்தின் கீழ் வீடு கட்டாமல் இருந்து வந்த நிலையில், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் பணிமேற்பார்வையாளராக பணியாற்றிய **எதிரி-5** திரு.ச.அந்தோணிசாமி என்பவருடன் கூட்டுசேர்ந்து, மேற்படி 6 முதல் 9 வரையிலான எதிரிகள் (பயனாளிகள்) வீடு கட்டியது போன்று பொய்யான ஆவணங்களை தயார் செய்து, Geo Tag புகைப்படம் எடுத்து, அவர்களுக்கு PMAY(G) திட்டத்தின் கீழ் அவர்களுக்கான திட்ட நிதி ரூ.8,16,808/- (ரொக்கம் ரூ.6,00,000/- + கட்டுமான பொருட்கள் ரூ.2,16,808/-) வழங்கியதன் மூலம் ரூ.8,16,808/- திட்ட நிதியை கையாடல் செய்து, எதிரிகள் அனைவரும் கூட்டுசேர்ந்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

எனவே, மேற்படி எதிரிகள் மீது அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2024 u/s 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471 IPC and u/s 12 r/w 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471 r/w 34, 109 IPC-ன்படி இன்று 28.11.204-ம் தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் கனம் தலைமை குற்றவியல் நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(K.S.ஹேமசித்ரா)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
பெரம்பலூர், (பொ) அரியலூர்.